**கவனிக்க.-** இவ் அதி விசேட வர்த்தமானியின், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1933/13 - 2015 සැප්තැම්බර් මස 21 වැනි සඳුදා - 2015.09.21

*1933/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆவது உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், அமைச்சரவை அமைச்சர்களினதும் அமைச்சுக்களினதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குரிய விடயங்கள், பணிகள் மற்றும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியவற்றையும் சாட்டுதல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால்,

பல்வேறு அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பன இவ்வறிவித்தல் திகதியிலிருந்து, கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்துள்ளனவென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எவரேனும் அமைச்சர் ஒருவருக்கு குறித்தொதுக்கப்பெறாத சகல விடயங்கள், பணிகள் மற்றும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் யாவும் சனாதிபதி என்ற வகையில் தொடர்ந்தும் எனது பொறுப்பிலேயே இருக்கும்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, செத்தெம்பர் 21.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*(1)* **பாதுகாப்பு அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. அரச பாதுகாப்பு தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங் களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
2. பாதுகாப்புச் சேவைகளின் கடமைகளை இலகுவாக்குவதன் மூலம் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல்
3. உள்ளகப் பாதுகாப்பைப் பேணுதல்
4. அரசாங்க, உள்ளக பாதுகாப்பு தொடர்பிலான புலனாய்வுச் சேவைகளைப் பேணுதல்
5. நேசநாட்டுப் படைகளுடனான உறவுகள்
6. சர்வதேச மனிதாபிமான நடவடிக்கை களுக்காக ஒத்துழைப்பு வழங்குதல்
7. முதிர்ந்த போர்வீரர்கள், ஊனமுற்ற படைவீரர் தொடர்பான அலுவல்கள்
8. வெடிமருந்துகளும் சுடுபடைக் கலன்களும் தொடர்பான அலுவல்கள்
9. வெளிச்சவீடுகளின் பராமரிப்பு (துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான வெளிச்சவீடுகள் தவிர்ந்த) தொடர்பான செயற் பாடுகள்
10. பாதுகாப்புச் சேவை ஆளணி யினருக்கு பாதுகாப்புக் கல்வியும் பின்னைய சேவைக் கல்வியும் பெற்றுக் கொடுத்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. இலங்கைத் தரைப்படை
2. இலங்கைக் கடற்படை
3. இலங்கை வான்படை
4. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
5. சேர் ஜோண் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்
6. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி
7. ரணவிருசேவை அதிகாரசபை
8. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை
9. தேசிய பயிலிளவல் சிறப்பணி
10. தேசிய பாதுகாப்பு நிதியம்
11. அரச இரகசிய தகவல் சேவை
12. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்
13. லங்கா லொஜிஸ்ரிக்ஸ் லிமிட்டட்
14. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டட்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- தரைப்படைச் சட்டம் (1949 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)
- கடற்படைச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க)
- வான்படைச் சட்டம்(1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)
- (2008ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க) அப்பிவெனுவென் அப்பி நிதியச் சட்டம்
- (2009ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதி யினரின் தலைமையதிகாரிச் சட்டம்
- (2008ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்
- (2009ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) கரையோரக் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம்
- (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடிப்பொருட்கள் சட்டம்
- (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக்கலன்கள் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) துப்பாக்கிச்சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்
- (1985ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்புச் சட்டம்

**(1) பாதுகாப்பு அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 11. பாதுகாப்புச் சேவை ஆளணியின ருக்கான உயர்கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் | | • (1966ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம் |
| 12. தனியார் பாதுகாப்புச் சேவைகள் தொடர்பிலான அலுவல்கள் | | • (2001ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம் |
| 13. மீட்பு நடவடிக்கைகளும் கரையோரப் பாதுகாப்புச் சேவைகளின் நிருவாகமும் | | • (1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங் களுக்கான நடவடிக்கைகளும் | | • (1998ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தனியார் பாதுகாப்புமுகவர் நிலையங்கள் சட்டம் |
| 15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • (1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க)பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் |
| | | • (1999ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) ரணவிரு சேவை அதிகாரசபைச் சட்டம் |
| | | • (1981ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க) சேர் ஜோண் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரிச் சட்டம் |
| | | • (1999ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை அடக்குதல் சட்டம் |
| | | • (2000ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க)கடல்சார் கடற்செலவின் பாதுகாப்புக்கெதிரான சட்டமுறையற்ற செயல்களை அடக்குதல் சட்டம் |
| | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித் துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

***(2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்***

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் மதிப்பிடுதலும்
2. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்
3. மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்க ளும் அதன் கீழ் தாபிக்கப்பட்ட அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட அலுவல்களும்
4. தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடலை பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
5. வலுவாதார அபிவிருத்திகாக ஆதரவளித்தல்
6. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமை பற்றிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத் தமைத்தல்
7. காடுகளும் காட்டியலும்
8. காடுகள், வனவிலங்குகள், மாவடை மரவடை ஆகியவற்றின் பாதுகாப்பும் பேணுகையும்
9. நாட்டின் மரங்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் வணிக ரீதியான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. ஸ்ரீ லங்கா மகாவலி அதிகார சபையும் அதன் துணைக் கம்பனி களும் இணைக் கம்பனிகளும் (வரை, மகாவலி லய்வ்ஸ்ரொக் என்ரபிறைஸ் கம்பனி தவிர்ந்த)
2. மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்க கருத் திட்டம்
3. குளங்களின் அணைகளைப் பாதுகாத்தல், நீர்வளங்கள் திட்ட மிடல் கருத்திட்டம்
4. மகாவலி இணைந்த (பீ வலய புனரமைப்பு) கருத்திட்டம்
5. உடவளவ இடதுபக்க கரையோரக் கருத்திட்டம்
6. உமாஓயா அபிவிருத்திக் கருத்திட்டம்
7. வனபாதுகாப்புத் திணைக்களம்
8. மத்திய சுற்றாடல் அதிகாரசபை
9. புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்
10. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி
11. அரச மரக் கூட்டுத்தாபனம்
12. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை
13. இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி நிறுவகம்
14. லங்கா ரிம்பர் பிளான்ட் அன்ட் இன்டஸ்ரீஸ்
15. கரையோர சூழல் பாதுகாப்புத் திணைக்களம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஸ்ரீ லங்கா மகாவலி அதிகாரசபைச் சட்டம்
- காடுகள் கட்டளைச் சட்டம் (453ஆம் அத்தியாயமான)
- (1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) சுரங்கங்கள், கனிப் பொருட்கள் சட்டம்
- (1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேசிய சூழல் சட்டம்
- (1988ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) தேசிய மரபுரிமை கானக இடப் பரப்புகள் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டம்
- (2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) கடல் மாசடைதல் தடுப்புச் சட்டம்
- (1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

***(2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 10. சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் பயனுறுதி வாய்ந்த செயற்படுத்துகையும் | 16. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | |
| 11. கடல் மாசுறல் தடுப்பு வேலைகள் | 17. பொறியியல் அலுவலகள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | |
| 12. கரையோரப் பாதுகாப்பும் பேணுகையும் | | |
| 13. இரத்தினக்கல், ஆபரணக் கைத் தொழிலையும் வர்த்தகத்தையும் ஊக்குவித்தலும் ஒழுங்குறுத்துகையும் | | |
| 14. நிரல் II இல் உள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 15. நிரல் II இல் உள்ள நிறுவனங்களின் கண்காணிப்பு | | |

***(3) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்காகவுள்ள தடைகளை இனமறிதல் மற்றும் அதற்கான தீர்வுகள்பற்றி விழிப்புணர்வுடன் கொள்கைகள், நிகழ்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்களை வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்-பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 2. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக பணியாற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து செயலாற்றுதலும் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்தலும் | | |

**(3) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பற்றி தற்போதும் உரிய காலத்திலும் செயற்படுத் தப்படும் அத்துடன் செயற்படுத்த வேண்டிய பல்வகையான நல்லிணக்க உபாயமுறைகளை மீளாய்வு செய்தலும் பிரச்சினை களைத் தீர்ப்பதற்குத் தலையிடுதலும் | | |
| 4. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகளைச் செயற் படுத்துதல் தொடர்பான பணிகளில் தேவைப்படும்போது தலையிடுதல் | | |

**(4) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய விடயங்களுக்கு உரியதாக நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக் களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களை யும் வகுத்தமைத்தலும் கண்காணித் தலும் மதிப்பிடுதலும் | 1. தேசிய திட்டமிடல் திணைக்களம் | • (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம் |
| 2. வலுவாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட தேசியக் கொள்கை களைத் தயாரித்தல் | 2. இலங்கை மத்திய வங்கி | • (1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) குடிசன மதிப்பீட்டுச் சட்டம் |
| 3. இலங்கை மத்திய வங்கியுடனான தொடர்புகள் மூலம் நிதிக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் அனைத்துமளாவிய பொருளாதார முகாமைத்துவமும் | 3. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | • இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) |
| 4. தேசிய அபிவிருத்தி நிகழ்ச் சித்திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்களைத் தயாரித்தல் | 4. தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் | • (2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம் |
| 5. பொருளாதார அபிவிருத்தியில் தனியார்துறையின் பங்களிப்புக்கு வசதியளித்தலும் அரசாங்க மற்றும் | 5. கொள்கை கற்கைகள் நிறுவனம் | • (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) வெளிநாட்டுக் கடன்கள் சட்டம் |
| | 6. தேசிய நடவடிக்கைக் கூடம் | • (1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் |
| | 7. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் | • (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம் |
| | 8. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு | |
| | 9. இலங்கை கடன் தகவல் பணியகம் | |
| | 10. தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு | |

**(4) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I* — *கடமைகளும் பணிகளும்*

தனியார் துறையினரிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதலும்

6. தொடர்புடைய தேசிய நோக்கங்களை அடைவதற்காக தேசியத் திட்டமிடல் அதிகாரிகளுடன் ஒருமைப்பாட்டுக்கு வந்த காலப் பகுதியும் வரவுசெலவுடனான வளங்களின் அளவினுள் மேற்குறிப்பிட்டுள்ள கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்

7. சிறந்த முறைமையுடன் வளங்களைப் பயன்படுத்தி அரச கொள்கைகள் செயற் படுத்தப் படுவதை உறுதிசெய்யக் கூடிய தாக புதிய முகாமைத்துவ நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உகந்த திறமுறைகளைத் தயாரித்தல்

8. சர்வதேச பிரதிநிதி நிறுவனங் களுடனான கூட்டிணைப்பும் பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு வளங்களைப் பயன்படுத்துதலும்

9. நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங் களுடனான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

10. சம்பளங்கள் நிர்ணயம் செய்வது பற்றிய ஆலோசனை அலுவல்கள்

11. தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான கருத்திட்டங்களைக் கூட்டிணைத்தலும் செயலாட்சி செய்தலும் மதிப்பிடுதலும்

12. மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்

*நிரல் II* — *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

11. தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம்
12. போராட்டம், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்
13. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்
14. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு
15. தேசிய மனிதவள அபிவிருத்திச் மன்றம்
16. தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்
17. இளைஞர் படையணி
18. தேசிய இளைஞர் விருதுவழங்கல் அதிகாரசபை
19. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு
20. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்

*நிரல் III* — *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தேசிய மனிதவள அபிவிருத்தி மன்றச் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவை பேரவைச் சட்டம்
- (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன் தகவல் பணியகக் கட்டளைச் சட்டம்
- வேறேதேனும்அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ்குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(4) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்** *( தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 13. வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தல் | | |
| 14. இளைஞர் அலுவல்கள் தொடர்பான விடயங்களுக்குரிய கருத் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றைத் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | | |
| 15. இளம் சமூகத்தினரை சரியாக வழிநடாத்துவதற்கான நோக்கத்தை அடிப்படையாகக்கொண்ட உளப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும் | | |
| 16. இளம் சமூகத்தினரை மையப் படுத்திய சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | | |
| 17. தொழில்வாய்ப்பற்ற இளைஞர் களை மையமாகக்கொண்ட ஆக்கத்திறன் நிகழ்ச்சித்திட்டங் களை நடைமுறைப்படுத்துதல் | | |
| 18. இளைஞர் அமைப்புகளின் விடயங்கள் | | |
| 19. இளைஞர் சமூகத்தை அடிப்படை யாகக்கொண்டு தேசிய தொண்டர் சேவைத் திட்டங்களை வகுத் தமைத்தல் | | |
| 20. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங் களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 21. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(5) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | • (2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) சுற்றுலாத்துறைச் சட்டம் |
| 2. சுற்றுலாத்துறை கைத்தொழில் அபிவிருத்தியும் நியமங்களையும் வகுத்தமைத்தல் | 2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 3. சுற்றுலாத்துறை முகவராண்மைகளின் பதிவும் ஒழுங்குறுத்துகையும் | 3. இலங்கை கண்காட்சி மற்றும் சம்மேளனப் பணியகம் | |
| 4. ஓய்வுநேரங்களைக் கழிப்பதற்காக பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்துதல் | 4. இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | |
| 5. ஒழுக்கப் பண்பாட்டு ரீதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்களிடையே சமயரீதியிலான விழுமியங்களை விருத்தி செய்வதன்பொருட்டு கொள்கை களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித் தலும் மதிப்பீடு செய்தலும் | 5. கிறித்தவ மத அலுவல்கள் திணைக்களம் | |
| 6. கிறித்தவ மத அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் கண்காணிப்பும் | | |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |

**(5) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(6) வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம் | • (1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)தேசிய மிருகக்காட்சிச்சாலைச் சட்டம் |
| 2. சுற்றாடல் ரீதியான மாற்றங்கள் மற்றும் மிகக்குறைந்த அளவிலான காபன் பாவனையைக்கொண்ட பொருளாதார ரீதியான வலுவாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டிய சட்டங்களையும் உபாயவழி முறைகளையும் வகுத்தமைத்தல் | 2. தேசிய தாவரப் பூங்கா திணைக்களம் | • (1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தாவரப் பூங்கா கட்டளைச் சட்டம் |
| 3. வலுவாதார அளவைகளையும் சுற்றாடல் சார்ந்த குறிகாட்டிகளையும் தயாரித்தல | 3. வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் | • (1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) தாவர,வனவிலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் |
| 4. வலுவாதார அபிவிருத்திக்கான செயலகங்களை அமைத்தல் | 4. வனசீவராசிகள் நம்பிக்கைப்பொறுப்பு | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 5. இலங்கையின் மரஞ்செடிகளைப் பேணுதலும் தாவரவியல் பூங்காக்களைப் பராமரித்தலும் பூச்செடி பயிர்ச் செய்கையை ஊக்குவித்தலும் | | |
| 6. மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்குகளை ஒன்றுசேர்த்தலும் காட்சிப்படுத்தலும் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் | | |

**(6) வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 7. வனசீவராசிகள் வளங்களைப் பேணுதல் | | |
| 8. வனசீவராசிகளின் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவிக்கும்போது சுற்றாடல் முறைமை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல் | | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(7) போக்குவரத்து அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. போக்குவரத்து தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. இலங்கை புகையிரதத் திணைக்களம் | • (1950ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) புகையிரதச் சட்டம் |
| | 2. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை | • (2005ம் ஆண்டின் 27ஆம் இலக்க) இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டம் |
| | 3. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் | • (1997ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம் |
| | 4. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | |
| 2. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒன்றிணைந்த பயணிகள், பண்டப் புகையிரதப் போக்குரத்து சேவைகளை வினைத்திறமையாக நடாத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் புகையிரத உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியும் புகையிரத சேவைகளை வழங்கலும் | 5. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | • (1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் |
| | 6. சிவில் விமான சேவைகள் அதிகாரசபை | • (1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டம் |
| | 7. வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி | • (1983ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) தனியார் (பேருந்து) சேவைகள் சட்டம் |

***(7) போக்குவரத்து அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்கல் | | • இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைச் சட்டம் (2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க) |
| 4. பாதுகாப்பானதும் நம்பகத்தகுந்ததுமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல் | | • (2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) சிவில் விமானச் சேவைகள் சட்டம் |
| 5. சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்துமுறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் | | • (1982 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) வான்செலவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| 6. தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 7. புதிய புகையிரத பாதைகளை நிர்மாணிப்பதற்குரிய காணிகளைக் கொள்ளலும் உட்கட்டமைப்பு வசதி கள் உள்ளடங்கலான சகல நடவடிக்கைகளும் | | |
| 8. மோட்டார் வாகனங்களின் பதிவும், உரிமம் வழங்கலும் | | |
| 9. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் | | |
| 10. மோட்டார் வாகனங்களுக்கு உரிய சட்டதிட்டங்கள் மற்றும் வழிகாட்டி நெறிகளை வழங்குதலும் ஒழுங்குபடுத்தலும் | | |
| 11. விமான நிலையங்களின் அபிவிருத்தியும் ஒழுங்குறுத்துகையும் | | |
| 12. விமான நிலையங்களில் ஆற்றப்படும் சேவைகளின் முன்னேற்றம், கட்டணங்கள் மற்றும் பண்புத்தரம் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் | | |
| 13. சர்வதேச விமானப் பிரயாணங்களை விரிவுபடுத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் அடங்கலாக ஏனைய தேவை யான நடவடிக்கைகள் | | |

**(7) போக்குவரத்து அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 14. இலங்கையின் விமான நிலையங்களை வெளிநாடுகள் பயன்படுத்துவதற்குரிய ஊக்குவிப்பினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொள்ளல் | | |
| 15. தனியார் விமானப் பிரயாண சேவைகளைக் கண்காணித்தலும் ஒழுங்குபடுத்தலும் | | |
| 16. வானூர்திகளைப் பதிவு செய்தல் | | |
| 17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. வெளிநாட்டலுவல்கள் பற்றிய விடயங்கள் மற்றும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்' | 1. வெளிநாடுகளிலுள்ள தூதராண்மைக் குழுக்கள் | • *(1981ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க)* காவற்தூதுப் பணிகள் சட்டம் |
| 2. வெளிநாடுகளில் இலங்கையின் பிரதிமையை உயர்த்துவதன்மூலம் இலங்கைக்கு உச்சக்கட்ட சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுதல் | 2. லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் திறமுறை கற்கை நிறுவனம் | • *(1996ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க)* *அரச தூதராண்மை சிறப்புரிமைகள் சட்டம்* |
| | 3. தேசிய கடல்சார் செயற்குழுச் செயலகம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

***(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. இலங்கைபற்றி சாதகமான பிரதிமையைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்படுதலும் சர்வதேச ரீதியாக சாட்டப்படும் எதிர்பிரசாரங்கள் குறித்து உரியவாறு பதிலளித்தலும் | | |
| 4. வெளிநாடுகளுடன் தூதராண்மை உறவுகளைப் பேணுதலும் சட்டவாக்கங்கள், உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள், சமவாயங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளும் | | |
| 5 தூதராண்மைக் காப்புரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொடுத்தல் | | |
| 6. வெளிநாட்டு வர்த்தகத்தையும் சுற்றுலா நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பதில் உதவியளித்தல் | | |
| 7. இலங்கையின் வெளிநாட்டு சேவை மற்றும் வெளிநாட்டு தூதராண்மைச் சபைகளுக்கு இணைப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் தொழில்வாண்மையை அதிகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 8. புவியியல்ரீதியான அரசியல் போக்குகளை கற்றாராய்ந்து இலங்கைக்குச் சாதகமான விதத்தில் அந்தப் போக்குகளை முகாமைசெய்வதற்கு வேண்டிய உபாயமுறைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல் | | |
| 9. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களின் நலனோம்புகைக்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |
| 10. இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் கடல்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வேண்டிய வெளிநாட்டு உறவுகளை உறுதிப்படுத்தல் | | |

**(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I* — *கடமைகளும் பணிகளும்*

*நிரல் II* — *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

*நிரல் III* — *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

11. தேசியப் பிரச்சினைக்குரிய பொறிமுறைபற்றி ஐக்கிய நாடுகளின் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் செயற்படுதல்

12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்

13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

**(9) சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலன்புரி தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் தொடர்பான விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்
2. கிராமிய மக்களின் வாழக்கைத்தரத்தை வலுவூட்டுவதற்காகத் திறமுறைகளை அறிமுகப்படுத்தலும் அவற்றை செயற்படுத்துவதற்கு நிதியுதவி வழங்குதலும்
3. கிராமிய மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளை திட்டமிடுதல்
4. கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
5. திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துதல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. சமூக சேவைகள் திணைக்களம்
2. வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றமும் தேசிய வயது முதிர்ந்தோர் செயலகமும்
3. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய பொதுச் செயலகம்
4. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய மன்றம்
5. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்
6. திவி நெகும அபிவிருத்தித் திணைக்களம்
7. கிராம அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
8. சமூக பாதுகாப்புச் சபை

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டம்
- (1992ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வறியோர் சட்ட கட்டளைச் சட்டம்
- (2000ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
- (1996ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) வலுவிழந்த ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
- (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம்
- (1992ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) கட்புலன் இழந்தோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்

***(9) சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>கடமைகளும் பணிகளும் | *நிரல் II*<br>திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | *நிரல் III*<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 6. விசேட தேவையுடையவர்களின் இயலாமை நிலைமைகளை முற்கூட்டியே இனங்காணல், அது தொடர்பில் தலையிடுதல், புனர்வாழ்வளித்தல் | | • (2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) திவி நெகும சட்டம்<br>• (1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) வறுமை நிவாரணச் சட்டம் |
| 7. மக்கள் உதவித்தொகை திட்டங்களை மீளாய்வு செய்தலும் மீள்ஏற்பாடு செய்தலும் தகுந்த சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தலும் மற்றும் மக்கள் உதவிப் பணம் வழங்குதலும் | | • (1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சமூக பாதுகாப்புச் சபைகள் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 8. சயரோகம், சிறுநீரக நோய், தொழுநோய், புற்றுநோய், தெலிசீமியா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களில் தங்கிவாழ்வோருக்கும் உதவுதல் | | |
| 9. குடும்ப ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்துதல் | | |
| 10. வலதுகுறைந்த ஆட்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சியளித்தலும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக தேவையான உபாயமுறைகளைத் திட்டமிடுதலும் | | |
| 11. வலதுகுறைந்த ஆட்களுக்கான சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 12. வயது முதிர்ந்த ஆட்களின் நலக் கவனிப்பும் சமூக அபிவிருத்திப் பணிகளில் முதியோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தலும் சிரேட்ட பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(10) தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. தொழில் திணைக்களம் | • ஊழியர் பேரவைகள் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) |
| 2. சர்வதேச தொழிலாளர் நியமங்கள், பதவியணி நிர்வாகம் மற்றும் நலன்புரி சம்பந்தமாக கொள்கைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | 2. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் | • ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) |
| 3. சர்வதேச தொழிலாளர் அமைப்பாண்மை, சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்பாண்மை ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை பேணுதல் | 3. ஊழியர் சேமலாப நிதியம் | • (1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் வேலைக்கமர்த்துதல் சட்டம் |
| 4. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தல் திட்டம் ஆகியவற்றை நிர்வகித்தல் | 4. தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அபிவிருத்திக்கான தேசிய நிறுவகம் | • தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) |
| 5. தொழில்நுட்ப உறவுகளும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தலும் | 5. தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | • கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) |
| 6. தொழில் உறவுகளுக்குரிய சட்டதிட்டங்களைத் தயாரித்தலும் ஒழுங்குறுத்தலும் | 6. சிரம வாசனா நிதியம் | • பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம் (1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) |
| 7. தொழில்சார் மற்றும்தொழில்துறை வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | 7. மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களம் | • (2009ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகச் சட்டம் |
| 8. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தலும் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்துத் தொழிற் சங்கங்களதும் அலுவல்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன் படுத்தும்பொருட்டுத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும் முறைப்படுத்தலும் | 8. வரையறுக்கப்பட்ட லங்கா ரெக்கியா பியஸ | • பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம் (1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) |
| | | • சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழிலையும் வேதனத்தையும்) விதிமுறைப்படுத்தல் சட்டம் (1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) |
| | | • (1998ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம் |

**(10) தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 9. தேசிய மனிதவலு மற்றும் தொழில்துறைக் கொள்கைகளைச் செயற்படுத்துதல் | | • தொழிலாளிகளின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்(1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) |
| 10. தொழில் நிறுவனங்களினால் கட்டணங்கள் அறவிடப்படுவதை ஒழுங்குறுத்தல் | | • தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டம் (1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) |
| 11. தொழில்வாய்ப்பின்மை நலன் காப்புறுதித் திட்டங்களுடன் தொடர்புடைய பணிகள் | | • (1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டம் |
| 12. தொழில்சார் வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | • தொழிலாளர் நட்டஈட்டுச் கட்டளைச் சட்டம் (1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | • (1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) கட்டணங்களை அறவிடும் முகவராண்மைகள் சட்டம் |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**(11) பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. பல்கலைக்கழகக் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br>2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பல்கலைக்கழகங்களும்<br>3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் ஏனைய நிறுவனங்களும் | • (1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 74ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம் |

***(11) பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 2. இலங்கையில் உயர்கல்வியின் பண்புத்தரத்தை முன்னேற்றும் நோக்குடன் சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்பாண்மைகளுடன் இணைதலும் ஒத்துழைப்பை மேம்படுத்தலும் | 4. புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம் | • (2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) தேசிய பொது வழிகள் சட்டம் |
| 3. உயர்கல்விக்குரிய அணுகுமுறைகளை விரிவுபடுத்தலுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | 5. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | • (1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க) வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |
| 4. தொழில் சந்தைக்குப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக முறைமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைரீதியான திருத்தங்களை மேற்கொள்ளுதலும் அதற்குத் தேவையான மனிதவளங்களைப் பெற்றுக் கொடுத்தலும் | 6. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 5. இலங்கை உயர்கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படும் பட்டங்கள் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள் சர்வதேச மட்ட அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 7. வீதி பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
| 6. பௌத்த மற்றும் பாளி கல்வியினை மேம்படுத்தலும், பிக்குமார்களின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கு அவசியமான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் | | |
| 7. சமநிலையான அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர்தரத்தினைக்கொண்ட தேசிய பெருந்தெருக்கள் முறைமையினை முன்னேற்றுவதற்கும் உயர்தரத்திலே பேணுவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்தலும் | | |
| 8. அதிவேகப் பாதைகளின் பாவனைக் கட்டணங்களை விதித்தலும் சேகரித்தலும் கண்காணித்தலும் | | |

**(11) பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வீதிகள் பற்றிய தேசிய ரீதியிலான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்களை வகுத்தமைத்தலும் குறித்த நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் கூட்டிணைத்தலும் செயலாட்சி செய்தலும் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக் குரியதான செயற் பாடுகள் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(12) நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் ஆகிய விடயங்கள் மற்றும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | • தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம் (1974ஆண்டின் 02ஆம் இலக்க) |
| 2. விசேட நகரத் திட்டமிடுகையும் அபிவிருத்தியும் | 2. தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 3. நகர அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதற்காக தேசிய பௌதீக திட்டங்களின் அடிப்படையில் சகல நிர்மாணப் பணிகளைச் செயலாட்சி செய்தலும் செயற்படுத்தலும் | | |
| 4. சகல பிரசைகளுக்கும் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |

**(12) நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 5. நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள்,துப்புரவேற்பாட்டு வசதிகள் குறித்த ஆய்வு, திட்டமிடுகை, உருவாக்குதல், நிர்மாணித்தல், நெறிப்படுத்துகை மற்றும் பராமரிப்பு | | |
| 6. சமுதாய நீர்வழங்கல் சேவைகள் மற்றும் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும் விதிமுறையாகவும் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(13) அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. அனர்த்த முகாமைத்துவ தேசிய மன்றம்<br>2. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்<br>3. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்<br>4. வளிமண்டலவியல் திணைக்களம்.<br>5. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு | • (2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைதுவச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 2. இயற்கை அனர்த்தங்களையும் மனிதனால் விளைவிக்கப்படும் அனர்த்தங்களையும் தணித்தல், பதிலளித்தல், மீளமைத்தல் மற்றும் நிவாரணம் அளித்தல் தொடர்பான அலுவல்களைக் கூட்டிணைத்தலும் முகாமை செய்தலும் | | |

***(13) அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. தேசிய கொள்கையின் அடிப்படையிலான தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தையும் தேசிய திடீர் அனர்த்த நடவடிக்கைத் திட்டத்தையும் வகுத்தமைத்தல் | | |
| 4. அனர்த்தங்களைத் தணித்தல், பதிலளித்தல், மீட்பு பற்றிய வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தலும் கூட்டிணைத்தலும் | | |
| 5. மேற்போந்த செயற்பணிகள் உரிய காலத்தில் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள், அரசாங்க நிறுவனங்கள், முகவராண்மைகள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்பாண்மைகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றல் | | |
| 6. சுற்றாடல் ரீதியான அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கக் கூடியவகையில் தொழில்நுட்பத் தரவுகளைக்கொண்ட வீடமைப்புக்களை ஊக்குவித்தல் | | |
| 7. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகியவற்றுக்குத் தகுந்த தொழில்நுட்பத்துடன் தொடர்பான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் ஊக்குவித்தல் | | |
| 8. வளிமண்டலவியல் அளவைகளும் ஆராய்ச்சிகளும் | | |
| 9. இயற்கை அனர்த்தங்கள் பற்றி முன்னெச்சரிக்கை செய்தலும் அது தொடர்பான பிரிவுகளை அறிவுறுத்தலும் | | |
| 10. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் இழைக்கப்படும் அனர்த்தங்கள்பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கூட்டிணைத்தல் | | |

**(13) அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 11. இயற்கைகை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் இழைக்கப்படும் அனர்த் தங்களின்போது மீட்பு நடவடிக்கைகளைச் செயற் படுத்துதல் | | |
| 12. சர்வதேச மனிதாபிமான உதவிச் சேவைகளை வழங்குதல் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறு வனங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய சகல விடயங்களுக் குரியதான செயற்பாடுகள் | | |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(14) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1 ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோடெக்னொலோஜி பிரைவேட் லிமிடெட்<br><br>2. தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்<br><br>3. தேசிய விஞ்ஞான மன்றம்<br><br>4. தேசிய விஞ்ஞான, தொழினுட்பவியல் ஆணைக்குழு | • அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம் (1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கம்)<br><br>• ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை ஏற்றங்கீகார சபைச் சட்டம் (2005ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கம்)<br><br>• (1984ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) இலங்கை நியமங்கள் நிறுவகச் சட்டம் |
| 2. சர்வதேச ரீதியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேற் கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு இசை வாகக் கூடியவாறு உள்நாட்டு ஆராய்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்பு களுக்கும் தேவையான வசதிகளை அளித்தல் | 5. கோள்மண்டலக் காட்சிக்கூடம்<br><br>6. நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சி. கிளார்க் நிலையம்<br><br>7. ஒத்திசைவு மதிப்பீடு பற்றிய இலங்கை ஏற்றங்கீகார சபைச் சட்டம்<br><br>8. இலங்கை கட்டளைகள் நிறுவகம் | • (1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டம்<br><br>• இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம் (1981ஆம் ஆண்டின் 55ஆம் இலக்கம்) |
| 3. விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | 9. இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு<br><br>10. புத்தாக்குநர் நிதியம் | |

***(14) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 4. ஆராய்ச்சிகளுக்கும் ஆராய்ச்சி நிறுவகங்களுக்கும் வசதிகளை அளிப்பதன் ஊடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடுதலும் மேற்கொள்ளுதலும் | 11. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டங்களும் |
| 5. தகவல், நெனோ மற்றும் உயிரின தொழில்நுட்பவியலும் உள்ளிட்ட புதிய ஆராய்ச்சிகளிலிருந்தும் கண்டுபிடிப்புகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளையும் அறிவினையும் வியாபார சமூகம் உள்ளிட்ட மற்றைய தரப்புகளுக்குப் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கை எடுத்தல் | 12. தேசிய ஆராய்ச்சி மன்றம் | |
| 6. தரங்களை விதித்தலும் நிர்வாகம் தொடர்பான அலுவல்களும் | 13. தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் | |
| 7. வேறு அமைச்சொன்றின் விடய எல்லைக்குட்படாத ஆராய்ச்சிகள் மற்றும் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்காக தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் | | |
| 8. புதிய கண்டுபிடிப்புககளில் மக்களை ஈடுபடுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 9. கட்டுமான கைத்தொழிலின் ஊக்குவிப்புக்கும் அபிவிருத்திக்குமான ஆராய்ச்சிகளைச் செயற்படுத்தல் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(15) சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களை யும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்
2. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்
3. சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விரிவான சீர்திருத்தங்களையுடைய உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துதல்
4. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி பொலிஸ் சேவையின் வினைத்திறனை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
5. சமூகச் சீரழிவாக மாறியுள்ள பல்வேறான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்
6. வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு
7. அபாயகர ஔடதங்களின் பாவனை யின் தடுப்பும் கட்டுப்பாடும்
8. சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக் குரிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. பொலிஸ் திணைக்களம்
2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
3. சிறைச்சாலைகள் திணைக்களம்
4. சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்
5. இளந்தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள*

- (1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ஔடதங்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை அளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்
- தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)
- (1877ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(15) சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 9. சிறைச்சாலை நிருவாகமும் மறுசீரமைப்பும் | | |
| 10. சமுதாய சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பான அலுவல்கள் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய சகல விடயங்களுக் குரியதான செயற்பாடுகள் | | |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(16) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. சுகாதார சேவைகள் திணைக்களம் | • நறுமணங்கள், உபகரணங்கள் மற்றும் அவுடதங்கள் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) |
| | 2. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை | • (1952 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சுகாதார சேவைகள் சட்டம் |
| | 3. விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை, சீதுவை | • (1927 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) மருத்துவக் கட்டளைச் சட்டம் |
| | 4. அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் | |
| | 5. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | • (1912 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டம் |
| 2. சகல மருத்துவமனைகளினதும் அவற்றில் இணைக்கப்பட்டுள்ள பதவியினரினதும் முகாமைத்துவமும் (மாகாண சபைகளின் கீழுள்ளவை தவிர்ந்த) | 6. சகல தேசிய போதனா மருத்துவமனைகளும் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க மருத்துவமனைகளும் | • (1870 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) மன நோய்க் கட்டளைச் சட்டம் |
| | 7. தேசிய சுகாதார மன்றம் | • (2006ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம் |
| 3. மருத்துவம் மற்றும் குறைநிரப்பு மருத்துவச் சேவையின் பண்புத்தரத்தையும் திறன்களையும் விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | 8. சுகாதார ஆராய்ச்சி நிறுவகம் | |
| | 9. தேசிய சுகாதார கல்வி நிறுவகம் | • தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டம் (1981ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கம்) |
| | 10. அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனை | |
| 4. இலங்கை மருத்தவச் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத் துவமும் | 11. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பப் பாடசாலை | • (1949 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) ஆதுலர்மனைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் |
| | 12. இலங்கை மருத்துவ மன்றம் | |

**(16) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 5. தேசிய சுகாதார காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய நடவடிக்கைகள் | 13. இலங்கை மருத்துவக் கல்லூரி மன்றம் | • (1929 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம் |
| | 14. தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் | |
| 6. தனியார் மருத்துவமனை மற்றும் வைத்திய சேவை நிலையங்களின் தரமான பண்புத்தரத்தினையும் தரவளவையும் மற்றும் விலைகளையும் ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும் | 15. தனியார் மருத்துவ நிறுவக மன்றம் | • (2006ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க) தனியார் மருத்துவ நிறுவன (பதிவுச்) சட்டம் |
| | 16. தேசிய சிறுநீரக சுத்திகரிப்பு மீள்நடுகை நிறுவனம் | • ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுப்பத்திரி சபைச் சட்டம் (1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கம்) |
| 7. மருத்துவ அறக்கொடை நிறுவனங்களின் ஒழுங்குறுத்துகையும் மேற்பார்வையும் | 17. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோச கம்பனி | |
| | 18. புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய அதிகாரசபை | • (1988ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க) இலங்கை தாதிகள் பேரவைச் சட்டம் |
| 8. பரவு நோய்கள், தொற்றுநோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் பரவுதலைக் கட்டுப்படுத்தல், தடுத்தல் மற்றும் நிவாரணத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | 19. ஆயுர்வேத திணைக்களம் | • மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டம் (1987ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கம்) |
| | 20. இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் | |
| 9. சர்வதேச தொற்றுநோய்த் தடைகாப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு ஒழுங்குவிதிகளைச் செயற்படுத்துதல் | 21. ஆயுர்வேத மருத்துவ மன்றம் | • (1999ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை சபைச் சட்டம் |
| | 22. ஆயுர்வேத கல்லூரியும் மருத்துவமனைச் சபையும் | |
| 10. பொதுச் சுகாதார சேவைகள் சம்பந்தமான கொள்கைகள் மற்றும் தரவளவுகளைத் தயாரித்தல் | 23. ஆயுர்வேத போதனா மருத்துவமனை | • (1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) ஆயர்வேத சட்டம் |
| 11. மருந்து வகைகளின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் சம்பந்தமான நடவடிக்கைகள் | 24. ஹோமியோபதி மருத்துவமனை, வெலிசறை | • (1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க) ஹோமியோபதி சட்டம் |
| | 25. ஹோமியோபதி மருத்துவ மன்றம் | • வேறேதேனும் அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 12. பாடசாலைச் சுகாதார சேவைகள் மற்றும் பல்மருத்துவ சேவைகளையும் நடைமுறைப்படுத்துதல் | | |
| 13. பொது துப்புரவேற்பாடும் புகையிரத சேவை துப்புரவேற்பாடும் | | |
| 14. தோட்டத் துறையின் சுகாதார பணிகள் | | |
| 15. தேசிய குருதிமாற்றுச் சேவைகள் தொடர்பான பணிகள் | | |

***(16) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்** (தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 16. அட்டவணைப்படுத்தப்பட்ட போதனா மருத்துவமனைகளின் சகல திணைக்களங்களினதும் சேவைகளினதும் முகாமையும் ஒழுங்கமைப்பும் அதுசார்ந்த உயர் மருத்துவக் கல்வி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பும் | | |
| 17. சுகாதார துறையினுள் ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான புதிய உபாயமார்க்கங்களை அறிமுகப் படுத்துதல் | | |
| 18. திரீபோசா விநியோகத் திட்டத்தைச் செயற்படுத்துதல் | | |
| 19. பொதுமக்களின் சுகாதாரத்தையும் போசாக்கினையும் மேம்படுத்துவதற் குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங் களை வகுத்தமைத்தலும் நடைமுறைப் படுத்தலும் | | |
| 20. பாரம்பரிய வைத்திய முறைகளைப் பாதுகாத்தலும் அவற்றை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் | | |
| 21. ஆயுர்வேத, சித்த, யுனானி மற்றும் ஹோமியோபதி மருந்துப் பொருட்களின் உற்பத்தி | | |
| 22. ஆயுர்வேத, சித்த, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளுக்கு அவசியமான மருந்து மூலப்பொருட்கள் மற்றும் தயாரித்த மருந்துப் பொருட்களின் இறக்குமதி, விற்பனை, விநியோகம் | | |
| 23. ஆயுர்வேத, சித்த, யுனானி ஆகிய சுதேச வைத்திய துறைகளை மேம்படுத்துவதற்காக வைத்தியசாலைகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மருந்தகங்களை நிறுவுதலும் முகாமை செய்தலும் | | |

**(16) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 24. மூலிகைச் செடிகள் மற்றும் பதனிடப்பட்ட ஆயுர்வேத, சித்த, யுனானி, மருந்துப் பொருட்களின் ஏற்றுமதியின் ஒழுங்குறுத்துகை | | |
| 25. ஆயுர்வேத மருந்துப்பொருள் தயாரிப்பாளர்களின் ஒழுங்குறுத்துகை | | |
| 26. மூலிகைச் செடிகள் செய்கையை ஊக்குவித்தலும் அதனுடன் தொடர்புடைய கருத்திட்டப் பணிகளும் | | |
| 27. ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்போர், ஆயுர்வேத மருத்துவத் தொழில்சார்ந்தோர், ஆயுர்வேத துணை மருத்துவ ஆளணியினரின் பதிவு | | |
| 28. ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனங்கள், பயிற்சி நிறுவகங்கள் மற்றும் மருந்தகங்களையும் தாபித்தலும் நெறிப்படுத்தலும் ஊக்குவித்தலும் | | |
| 29. சுதேச மருத்துவ சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவ அலுவல்களும் | | |
| 30. ஆயுர்வேத தொழில்துறையினர் களுக்காக உயர்கல்வி வாய்ப்புக் களைப் பெற்றுக்கொடுத்தல் | | |
| 31. ஆயுர்வேத, சித்த, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவமுறைப் பயன்பாட்டின் அபிவிருத்தியும் ஒழுங்குறுத்துகையும் | | |
| 32. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 33. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(17) நிதி அமைச்சர்***

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. நிதி மற்றும் வரியிடல் விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
2. அரசநிதி மற்றும் பாரியளவு நிதி முகாமைக் கொள்கைகளை வகுத்தமைத்தல்
3. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தலும் நிதி வளங்களின் முகாமையும்
4. தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் செயற்படுத்துகையும் வரவுசெலவு ரீதியான நிதிக் கட்டுப்பாட்டின் வினைப்படுத்துகையும்
5. தேசிய வரிக் கொள்கையின் முகாமையும் அரச வருவாயின் வினைத்திறனான பயன்பாடும்
6. அரச நிதி ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்துகை
7. திரட்டு நிதியத்தின் முகாமை
8. வருமான முகவராண்மை நிறுவனங்களின் முழுமையான மேற்பார்வை
9. பொதுச் செலவினங்களின் முகாமை
10. அரசாங்கத்தின் கொள்வனவுகள் தொடர்பிலான மதியுரைச் சேவைகள்
11. திணைக்களங்கள் மற்றும் ஏனைய பொது நிதியத்தின் கண்காணிப்பு

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. பொதுத் திறைசேரி
2. அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
3. தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
4. பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்
5. அரச நிதித் திணைக்களம்
6. திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்
7. அரச கணக்குகள் திணைக்களம்
8. வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
9. அபிவிருத்தி நிதித் திணைக்களம்
10. கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களம்
11. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்
12. நீதி அலுவல்கள் திணைக்களம்
13. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
14. மதிப்பீட்டுத் திணைக்களம்
15. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம்
16. இலங்கைச் சுங்கத் திணைக்களம்
17. மதுவரித் திணைக்களம்
18. இலங்கை காப்புறுதிச் சபை

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள*

- ஒதுக்கீட்டுச் சட்டங்கள்
- (1998ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) பந்தயம்பிடித்தல், சூதாட்டவரிச் சட்டம்
- (1956 ஆம் அண்டின் 17 ஆம் இலக்க) சுங்கக் கட்டளைச் சட்டம்
- (2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்
- (1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர்கள் சபைச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)பொருளாதார சேவை அறவீட்டுச் சட்டம்
- (1891 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) அரச சேவை பரஸ்பர சகாய நிதிச் சங்க கட்டளைச் சட்டம்
- (1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டம்
- (1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க) நிதிக் கம்பெனிகள் சட்டம்
- (2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க) நிதிக் குத்தகைச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்
- (2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க) நிதி முகாமை (பொறுப்புடைமை) சட்டம்

***(17) நிதி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

12. அரச நிதிக் குழுவின் அறிக்கைகள் மீதான திறைசேரிக் குறிப்புகளைப் பேணுதல்
13. திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வை ஊக்குவிப்பதற்கான வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்
14. ஆளணி முகாமையும் சம்பளங்களை நிர்ணயித்தல் பற்றிய ஆலோசனை நடவடிக்கைகளும்
15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்
16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

19. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக் காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபை
20. அரசசேவை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்
21. தேசிய லொத்தர் சபை
22. அபிவிருத்தி லொத்தர் சபை
23. லோகோர் சீமாட்டி நிதியம்
24. வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு
25. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
26. மிலோதா நிறுவனம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள*

- (2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) உள்நாட்டு அரசிறைச் சட்டம்
- (2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க) காப்புறுதித் தொழில்துறை ஒழுங்கு படுத்துதல் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) லோகோர் சீமாட்டி நிதியச் சட்டம்
- (1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்
- (2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்
- (2006ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம்
- (1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக் காய்வு நியமங்கள் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1982 ஆம் ஆண்டிக் 43 ஆம் இலக்க) முத்திரை தீர்வைச் சட்டம்
- (2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க) பெறுமதி சேர் வரிச் சட்டம்
- (2002ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சேமநல நன்மைகள் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) நிதிச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சபைச் சட்டம்

***(17) நிதி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- *(1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)* இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

*(18)* **திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்
2. பாடசாலைக் கல்வியை முடித்தபின் பல்கலைக்கழக கல்விக்காகத் தகைமைபெறாத மாணவர்களிற்கு தொழிற்கல்வி வாய்ப்புகளை விரிவாக்கக்கூடியவாறான கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை அளித்தலும்
3. தொழிற்சந்தைக்கு ஏற்ற ஊழியர் படையினை உருவாக்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்வியை நவீனமயப்படுத்துதல்
4. பயிலுநர் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
5. தொழில்சார் கல்வியை அணுகுவதற்கான ஆர்வத்தை அதிகரிப்பதற்கான திறமுறைகளை உறுதிப்படுத்துதலும் நடைமுறைப்படுத்துதலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. மூன்றாம்நிலைக் கல்வி, வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு
2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
3. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
4. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்
5. இலங்கை - ஜேர்மனி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம்
6. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்த நிறுவனங்கள்
7. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
8. இலங்கை அச்சக நிறுவகம்
9. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) மற்றும் அந்நிறுவனத்துடன் இணைந்த சகல தகவல் தொழில்நுட்ப நிலையங்களும்
10. தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றொழில் பொறியியல் நிறுவகம்(கடல்சார் பல்கலைக்கழகம்)

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- *(1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க)* இலங்கை தேசிய தொழினுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்.
- *(1984ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க)* இலங்கை அச்சக நிறுவகச் சட்டம்
- *(1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க)* மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டம்
- *(1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க)* இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைச் சட்டம்
- *(1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க)* தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டம்
- *(2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க)* தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக் கழகச் சட்டம்
- *(2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க)* இலங்கை கடல்சார் பல்கலைக்கழகச் சட்டம்
- *(1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க)* இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்விச் சட்டம்

*(18)* **திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | 11. தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | 12. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | |
| | 13. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் | |

**(19) உள்நாட்டலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. உள்நாட்டலுவல்கள் விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. சகல மாவட்டச் செயலகங்களும் | • (1992ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) தத்துவங்களைக் கைமாற்றுதல் (பிரதேசச் செயலாளர்கள்) சட்டம் |
| 2. அரச விழாக்களை ஏற்பாடு செய்தல் | 2. சகல பிரதேச செயலகங்களும் | • (1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச் சட்டம் |
| 3. கிராமங்கள் அடிப்படையிலான அரச மையங்களின் எல்லைகளை நிர்ணயித்தல் | 3. பதிவாளர் நாயகம் திணைக்களம் | • (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) மலைநாட்டு விவாக மற்றும் மண நீக்கற் சட்டம் |
| 4. கிராமங்கள் அடிப்படையில் அரசாங்கத்தை மையமாகக் கொண்ட சபையினைத் தாபித்தல் | | • (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம் |
| 5. மாவட்ட அபிவிருத்தி கூட்டிணைப்புச் சபையை நிறுவுதல் | | • (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டம் |
| 6. பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு என்பவற்றைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் | | • (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | • (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சாதாரண விவாகப் பதிவு கட்டளைச் சட்டம் |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • (1971ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விடுமுறைகள் சட்டம் |
| | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

### *(20) உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் தொடர்பான விடயங்களுடன் தொடர்புபட்ட நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
2. குடிவரவு, குடியகல்வு அலுவல்கள்
3. இலங்கைப் பிரசாவுரிமை மற்றும் புறத்தொப்படைத்தல் தொடர்பான நடவடிக்கை
4. ஆட்களைப் பதிவுசெய்தல்
5. வடமேல் வலயத்தினுள் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தலும் மற்றும் கொள்கைகளைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும்
6. வடமேல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தலுக்கான செயலகம் ஒன்றினைத் தாபித்தல்
7. இலங்கையின் தேசியக் கலாசாரத்தின் அனைத்து அங்கங்களையும் முன்னேற்றும் பொருட்டுத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
8. வெளிநாடுகளுடன் கலாசார உறவுகளைப் பேணுதல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்
2. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்
3. கலாசார அலுவல்கள் திணைக்களம்
4. தேசிய நூதனசாலைத் திணைக்களம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) குடிவருவோர், குடியகல் வோர் சட்டம்
- (1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) பிரசாவுரிமைச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வமிசாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் சட்டம்
- (1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் சட்டம்
- (1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க) நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்
- (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க) கலாசார சொத்துக்கள் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(20) உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் (தொடர்ச்சி)**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 9. கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளுக்குப் பங்கம் ஏற்படாதவாறு கலாசாரத்தின் அடிப்படையிலான சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்து வதற்குத் தேவையான ஒத்துழைப் புகளை வழங்குதல் | | |
| 10. சிங்கள கலைக் களஞ்சியம், சிங்கள அகராதி மற்றும் மகா வம்சம் என்பவற்றை வகுத்தமைப்பதற்காக தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 11. இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக கலாசாரத்தின் பங்களிப்பைப் பயன்படுத்தும் போக்குகளை இனமறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(21) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. வாணிபத் திணைக்களம்<br>2. கம்பனிப் பதிவாளர் திணைக்களம்<br>3. இலங்கை புலமைச்சொத்துக்கள் பணியகம்<br>4. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>5. நுகர்வு அலுவல்கள் பற்றிய அதிகாரசபை | • (1987ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க) வியாபாரப் பெயர்கள் சட்டம்<br>• (2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க) கம்பெனிகள் சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க) புலமைச் சொத்துக்கள் சட்டம்<br>• வியாபாரச் சின்னங்கள் சட்டம் (1964ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க) |

***(21) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. கைத்தொழில் ஊக்குவிப்பும் அபிவிருத்தியும்
3. வர்த்தகப்பொருள் கண்காட்சிகளை நடாத்துதல்
4. உள்நாட்டுச் சந்தையில் நுகர்வுப் பொருட்களை உயர்பண்புத் தரம் கொண்டதாகவும், பற்றாக்குறை இல்லாமலும் நியாயமான விலைக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
5. 1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஈட்டுச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அனுமதித்தல்
6. நுகர்வுப் பண்டங்கள் சார்ந்த தேசிய விலைக் கொள்கைகளை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
7. நுகர்வோர் பாதுகாப்புக்காக நடவடிக்கைகளை எடுத்தல்
8. இலங்கையில் கைவினைக் கைத்தொழில் உற்பத்திக்கான வடிவமைப்புகளை விருத்தி செய்தலும் விஸ்தரித்தலும்
9. புலமைச் சொத்துக்கள்பற்றிய சர்வதேச சமவாயத்தை நிருவகித்தல் பற்றிய கருமங்களின் வெளியீட்டு உரிமை மற்றும் உலகப் புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் வெளியீட்டு உரிமை தொடர்பான கருமங்கள்
10. சீனிக் கைத்தொழிலுக்குரிய அரச வளங்களின் முகாமைத்துவமும் பாதுகாப்பும்

*நிரல் II*

*திணைக்களங்களும்*
*அரச கூட்டுத்தாபனங்களும்*
*நியதிச்சட்ட நிறுவனங்களும்*

6. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
7. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி
8. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
9. அளவுக்கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்
10. உணவு ஆணையாளர் திணைக்களம்
11. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவு சங்கப் பதிவாளர்)
12. கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு
13. உள்ளக வர்த்தகத் திணைக்களம்
14. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்
15. இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகங்களும்
16. நெசவுக் கைத்தொழில் திணைக்களம்
17. கஹட்டகஹ கிராபைட்
18. லங்கா லேலன்ட் லிமிட்டட்
19. லங்கா அசோக் லேலன்ட் லிமிட்டட்
20. வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனி
21. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
22. மாந்தை சோல்ட் லிமிட்டட்
23. ஆனையிறவு உப்பளம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட*
*வேண்டிய சட்டங்கள்*

- (1935 ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க) சீட்டுக் கட்டளைச்சட்டம்
- பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டம் (1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க)
- (2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
- (1949 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனச் சட்டம்
- (1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டம்
- 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்
- (1961 ஆம் ஆண்டின் 62ஆம் இலக்க) வியாபாரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம்
- (1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) அளவீட்டுக்கூறு நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம்
- (2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) இலங்கைச் சந்தைப் படுத்தல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்
- (1946 ஆம் அண்டின் 37 ஆம் இலக்க) நிறுவைகள்,அளத்தல்கள் கட்டளைச் சட்டம்

***(21) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்

12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

24. லங்கா ரெக்ஸ்ரைல் மில்ஸ் எம்போரியம் லிமிட்டட்

25. லங்கா சலுசல லிமிட்டட்

26. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை

27. தேசிய அருங்கலைப் பேரவை

28. இலங்கை கைவினைக் கைத்தொழில் சபை (லக்சல)

29. தேசிய வடிவமைப்பு நிலையம்

30. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி மூலதனக் கம்பனி

31. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் அதிகாரசபை

32. வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனிக் கைத்தொழில் கம்பனி

33. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி

34. வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கூட்டுத்தாபனம்

35. இலங்கை கனிய மணல் கம்பனி

36. வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவகச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்
- (2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) புடவைப் பங்குச் சபைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(22) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. நகர அபிவிருத்தி அதிகாரசபை | • (1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க) நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |
| 2. கொட்டாவ, கடுவெலை மற்றும் கடவத்தை நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களும் அதனோடிணைந்த அலுவல்களும் | 2. இலங்கை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | • (1980ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| 3. நகர்புறங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதிக அபிவிருத்திகளை ஒன்றிணைத்து விதிமுறையாக ஊக்குவித்தலும் ஒழுங்குறுத் தலும் | 3. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | • (1961 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி செய்தல் சட்டம் |
| 4. நகரப்புற திண்மக் கழிவுப்பொருட்களின் முகாமை | | • (1968ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) நிரப்பல் மற்றும் அபிவிருத்தி சபைச் சட்டம் |
| 5. காணி நிரப்பலும் அதனுடன் தொடர்பான அபிவிருத்திப் பணிகளும் | | • 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நகர, கிராம நிர்மாண கட்டளைச் சட்டம் |
| 6. நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகளும் வசதிகளும் குறைந்த பகுதிகள் மற்றும் சேற்று நிலங்களை பொதுவானதொரு திட்டத்திற்கமைய அபிவிருத்தி செய்வதற்காக வழிகாட்டுதல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 7. தேசிய பௌதீகத் திட்டங்கள் மற்றும் பிரதேச பௌதிகத் திட்டங்களைத் தயாரித்தல் | | |
| 8. ஒன்றிணைந்த நகர அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பௌதீக ரீதியிலான திட்டங்களின் அடிப்படையில் சகல நிர்மாணப் பணிகளைச் செயலாட்சி செய்தலும் ஒழுங்குறுத்தலும் | | |

**(22) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங் களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(23) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி தொடர்பி லான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக் களங்கள், நியதிச்சட்ட நிறுவனங் கள் மற்றும் அரச கூட்டுத் தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங் களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் திணைக்களம் | • (1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் சட்டம் |
| 2. கடல்நீர், உவர்நீர் மற்றும் நன்நீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத் தியும் முகாமையும் | 2. தேசிய நீர் உயிரன வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை | • (1990ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க) மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டச் சட்டம் |
| 3. அரசுடைமையான மீன்பிடிப் படகு களின் முகாமையும் செயலாட்சி யும் | 3. இலங்கை கடற்றொழில் துறை முகங்கள் கூட்டுத்தாபனம் | • (1998ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் |
| 4. புறநீங்கலான பொருளாதார வலயத்தினுள் கடற்றொழில்சார் அலுவல்களின் அபிவிருத்தியும் முகாமையும் | 4. வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றம் | • (1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டம் |
| 5. கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரத் தளங்களின் நிறுவுகை, பராமரிப்பு மற்றும் முகாமை | 5. இலங்கை கடற்றொழில் கூட்டுத் தாபனம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| | 6. தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | |

**(23) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. கடற்றொழிலுக்கு அவசியமான ஐஸ்பொறித் தொகுதிகள், குளிர் அறைகள் மற்றும் ஏனைய உட் கட்டமைப்பு வசதிகளை நிறுவுதலும் செயற்படுத்தலும் | | |
| 7. உயிருள்ள, உயிரற்ற தேசிய நீரக வளமூலங்களின் அபிவிருத்தி | | |
| 8. கடற்றொழில் படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் என்பவற்றின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் | | |
| 9. கடல் மீன்வளர்ப்பு உள்ளிட்ட நீர் வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தியும் முகாமையும் | | |
| 10. மீன் மற்றும் மீன்சார்ந்த உற்பத்திகளின் வியாபாரமும் விநியோகமும் | | |
| 11. கடற்றொழில் துறைசார் ஆராய்ச்சிப் பணிகளை விஸ்தரித்தலும் மற்றும் அதன் பிரதிபலன்களை கடற்றொழிலின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தலும் | | |
| 12. நவீன விஞ்ஞான திறமுறைகளின் ஊடாக கடல் வளங்கள்சார் ஆராய்ச்சிப் பணிகளை விஸ்தரிப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்துதல் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(24) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக் களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத் தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்
2. பெருந்தோட்டப் பயிர்களின் அறுவடையை அதிகரிப்பதற்காக வேண்டிய இணைந்த ஏனைய வசதிகளை ஏற்படுத்தல்
3. பெருந்தோட்டக் கைத்தொழில் துறையின் உற்பத்தித்திறனை ஏற்படுத்துவதற்காக சருவதேச போட்டியினை அதிகரித்தல்
4. பெருந்தோட்டப் பயிர்களின் அடிப் படையிலான சேர்பெறுமதியை அதிகரிப்பது தொடர்பான கைத் தொழில்களை முன்னேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல்
5. தேயிலை, இறப்பர் என்பன தொடர்பில் உரிமம் வழங்கல்
6. தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்
7. இறப்பர் தோட்டங்களைப் பிரித் தொதுக்கல் தொடர்பில் உரிமம் வழங்கலும் கட்டுப்படுத்தலும்
8. பல்பயிர் செய்கைகள், கூட்டுப் பண்ணை முறைகளினூடாக பெருந் தோட்டக் காணிகளை உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்திக் கொள் ளலும், அதன்மூலம் உற்பத்தியையும் தொழில்வாய்ப்பையும் அதிகரித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
2. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
3. இலங்கை தேயிலைச் சபை
4. சிறு தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை
5. தேயிலை, இறப்பர் தோட்டங்கள் (கட்டுப்பாட்டு, பிரித்தொதுக்குதல்) சபை
6. தேயிலை சக்தி நிதியம்
7. துருசவிய நிதியம்
8. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்
9. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்
10. தெங்கு பயிரிடல் சபை
11. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
12. தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்
13. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்
14. வரையறுக்கப்பட்ட களுபோவிட்டி யன தேயிலைத் தொழிற்சாலை
15. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1979ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகச் சட்டம்
- (1970ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க)இலங்கை தேயிலைச் சபைச் சட்டம்
- (1953 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டம்
- (1930 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) இறப்பர் ஆராய்ச்சி சபைக் கட்டளைச் சட்டம்
- (1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்
- (1959ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு) சட்டம்
- (1958ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலை கட்டுப்படுத்துதல்) சட்டம்
- (1957ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க) தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம்
- (2000ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம்
- (1975ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டம்
- (1958ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) தேயிலை உதவுதொகைச் சட்டம்

***(24) பெருந்தோட்டக் கைத்தொழில்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. தேயிலை, இறப்பர், தெங்கு கைத்தொழில்களின் அபிவிருத்தியும் ஊக்குவிப்பும் ஆராய்ச்சிகளுடன் தொடர்பான அலுவல்களும் | | • (2000ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க) துரு சவிய நிதியச் சட்டம் |
| 10. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள தொழில்முயற்சிகளுக்கான கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை அறிமுகப்படுத்துதல் | | • (1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க) தேயிலை ஆராய்ச்சிச் சபை சட்டம் |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | • (1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) தெங்கு பயிர்ச்செய்கை சபைச் சட்டம் |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • (1984 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தெங்கு அபிவிருத்திச் (விசேட ஏற்பாடுச்) சட்டம் |
| | | • (1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) தெங்கு அபிவிருத்திச் சட்டம் |
| | | • (1967ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) தென்னை நார்ச் சட்டம் |
| | | • (1935 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) தெங்கு உற்பத்திப் பொருட்கள் கட்டளைச் சட்டம் |
| | | • (1950ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) தென்னை ஆராய்ச்சி சபைச் சட்டம் |
| | | • கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டம் (1981ஆம் ஆண்டின் 75ஆம் இலக்க) |
| | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**(25) மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. இலங்கை மின்சார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் | • (2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) இலங்கை மின்சாரச் சட்டம் |
| 2. மின்வலு வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல் | 2. இலங்கை மின்சாரக் கம்பனி | • (2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை சட்டம் |
| 3. நீர், அனல், நிலக்கரி மற்றும் காற்று ஆகிய மூலவளங்களின் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்வும், திட்டமிடலும் கண்காணிப்பும் அபிவிருத்தியும் | 3. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி | • (1985ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க) எரிசக்தி பேணல் நிதியச் சட்டம் |
| 4. கிராமிய மின்வலுப்படுத்துகை | 4. வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி | • (2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை அணுசக்தி சட்டம் |
| 5. எரிசக்தி வினைத்திறன் கேள்விப்பாட்டின் அடிப்படையில் கேள்வியை முகாமை செய்தலும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அபிவிருத்தி செய்தலும் | 5. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 6. புதுப்பிக்கத்தக்க சக்தியை அபிவிருத்தி செய்தல் | 6. இலங்கை அணுசக்தி சபை | |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | 7. இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகைச் சபை | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(26) கமத்தொழில் அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. கமத்தொழில் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
2. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கமத்தொழில் ரீதியான உற்பத்தியையும் உற்பத்திப் பெருக்கத்தையும் மேம்படுத்தத் தேவையான உபாயவழிகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல்
3. பயிர் பல்வகைப்படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்
4. பல்வேறு கமத்தொழில் துறைகளில் ஈடுபடுவோருக்கு முறைசார் பயிற்சியளித்தலும் கல்விசார் ஆராய்ச்சி வாய்ப்புக்களை விஸ்தரிப்ப தற்கான திறமுறைகளை வகுத்தமைத்தலும்
5. கமத்தொழிலின் அடிப்படையிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தலும் சந்தை வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்
6. உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் பண்புரீதியான பெறுமதிகளை பாவனையாளர்களான நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்
7. வயல்காணிகள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. கமத்தொழில் திணைக்களம்
2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
3. தேசிய உரச் செயலகம்
4. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை
5. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகார சபையும் (ஹதபிம)
6. தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை
7. பயறு வகை, தானிய ஆராய்ச்சி, உற்பத்தி அதிகாரசபை
8. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
9. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்
10. பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம்
11. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
12. கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி
13. வரையறுக்கப்பட்ட ஜனதா பர்டிலய்ஸர் என்டபிறைசஸ்
14. வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்
- (1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்
- (1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபைச் சட்டம்
- (1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம்
- (2003ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) விதைநெல் சட்டம்
- (1996ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம்
- (1987ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான பேரவைச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) உரவகைகளை விதிமுறைப்படுத்தற் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(26) கமத்தொழில் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 8. விவசாய மக்களின் நலன்புரி சேவைகளைத் திட்டமிடுதலும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் | | |
| 9. பண்புரீதியான தரத்தைக்கொண்ட உரவகைகளை இறக்குமதி செய்தலும் மற்றும் விநியோகத்தின் மூலம் உரமானிய நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறமையுடன் செயற்படுத்து தலும் | | |
| 10. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும் | | |
| 11. ஐக்கிய நாடுகளின் உணவு, கமத்தொழில் அமைப்பாண்மை யுடன் தொடர்புபட்ட பணிகள் | | |
| 12. மரக்கறி அபிவிருத்திச் சபை மற்றும் பழங்கள் அபிவிருத்திச் சபை என்பனவற்றின் சொத்துக்கள் மற்றும் ஏனைய வளங்களுக்குரிய அலுவல்கள் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக் குரியதான செயற்பாடுகள் | | |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(27) புத்தசாசன அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. ஒழுக்க பண்பாடானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மத விழுமியங்களை மக்கள் மத்தியில் வளர்க்கும் பொருட்டு நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் மதிப்பிடுதலும் கண்காணித்தலும். | 1. பௌத்த அலுவல்கள் திணைக்களம் | • (1990ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) புத்த சாசன நிதியச் சட்டம் |
| 2. பௌத்த சமயத்தைப் பாதுகாத்து, போசித்து ஊக்குவிப்பதற்காக தகுந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல் | 2. புத்தசாசன நிதியம் | • (1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம் |
| 3. பௌத்த சாசனத்தை பாதுகாத்து, போசிப்பதற்காக உகந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தல் | 3. சர்வதேச பௌத்த நிலையங்கள் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 4. பௌத்த சமய அலுவல்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தலும் கண்காணித்தலும் | | |
| 5. புனிதபூமி திட்டமிடுதலும் அபிவிருத்தி செய்தலும் | | |
| 6. மேலறிவுரை மன்றத்தின் தேவைகளை நிறைவேற்றல் | | |
| 7. சர்வதேச ரீதியில் தேரவாத பௌத்த சமயத்தை பிரசாரம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(28) நீதி அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. நீதி நிருவாகத்தை நிர்வகிக்கும் பொறிமுறை பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. சட்டமா அதிபர் திணைக்களம் | • (1987ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க) உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமை சபைச் சட்டம் |
| 2. அரசியலமைப்பின் மூலம் வேறெவரிடத்தும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பான நீதிமன்றங்களின் நிருவாக அலுவல்கள் | 2. சட்ட வரைஞர் திணைக்களம் | • (2001ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) சர்வதேச சிறுவர் கடத்தலின் குடியியல் துறைகளுக்குரிய சமவாயச் சட்டம் |
| 3. சமூகத்தேவைகள் மற்றும் உலகளாவிய போக்குகளைக் கவனத்தில் கொண்டு சட்ட முறைமைக்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்தல் | 3. கடன் நிவாரண சபைத் திணைக்களம் | • (1974 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க) சட்டக் கல்விச் சபைச் சட்டம் |
| 4. நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்தலும் ஒட்டுமொத்த நிருவாகத்துடன் தொடர்புடைய சகல பணிகளையும் முறையாகவும் வினைத்திறமையுடனும் நிறைவேற்றுதலும். | 4. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | • (1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) கடன் நிவாரண சபைக் கட்டளைச் சட்டம் |
| 5. அரசாங்கம் சார்பாக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்தலும் சிவில் சட்ட நடவடிக்கைகளும் | 5. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | • (1956 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை வலுப்படுத்தல் கட்டளைச் சட்டம் |
| 6. அரசுக்கும் சகல அரச திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல் | 6. இலங்கை சட்ட ஆணைக்குழு | • (1988 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் (பண்டங்களை அகற்றுதல்) சட்டம் |
| 7. சட்ட வரைவுகளை தயாரித்தல் | 7. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை | • (1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) மாகாண மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| 8. யாதேனுமொரு குற்றவாளிமீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையைக் குறைத்தல், தளர்த்துதல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் | 8. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு | • (1978ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) கூட்டுத்தாபன வழக்குரைஞர் நிறுவகச் சட்டம் |
| | 9. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | • (1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டம் |
| | 10. சட்டக் கல்விச் சபை | • (1961 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) நீதிமன்ற மொழிச் சட்டம் |
| | 11. நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | • (1969ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) சட்ட ஆணைக்குழுச் சட்டம் |

***(28) நீதி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. ஒட்டுமொத்த குவாசி முறைமையின் உற்பத்திப் பெருக்கத்தையும் வினைத் திறமையையும் உயர்த்துவதற்காக தகுந்த வேலைத் திட்டமொன்றை வகுத்தமைத்தலும் நடைமுறைப் படுத்தலும் | | • (1978ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) சட்ட உதவிச் சட்டம் |
| 10. தொழில் நியாய சபைகளின் நிருவாகமும் அது தொடர்பான ஏனைய பணிகளும் | | • (1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க) மத்தியஸ்த சபைகள் சட்டம் |
| 11. சட்டத்தை மீள் ஆவணப்படுத்தலும் கோவைப்படுத்துதலும் | | • (1840 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) மோசடி தவிர்த்தல் கட்டளைச் சட்டம் |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | • (1957 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) சமூக இயலாமை தவிர்த்தல் சட்டம் |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • (1979ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) ஆரம்ப நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டம் |
| | | • (1969 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) அரசாங்க (சிவில் குற்றங்களுக்கான பொறுப்புக்கள்) சட்டம் |
| | | • (1926 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) குற்றவியல் தவிர்த்தல் கட்டளைச் சட்டம் |
| | | • குவாசி நீதிமன்ற (நியமனங்களைச் செல்லுபடியாக்கல்) சட்டம் |
| | | • (1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் |
| | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

***(29) கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சர்***

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. கிராமிய பொருளாதார அலுவல் தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட் டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும்
2. கிராமிய வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்
3. பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் உபாயவழிமுறைகளின் அபிவிருத்தி
4. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி அலுவல்கள்
5. கிராமிய பொருளாதார அலுவல்களுக்காக நிதி உதவிகளை வழங்குதல்
6. கால்நடை வளப்பிரிவு உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்
7. கால்நடை நலனோம்புகை அலுவல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அலுவல்கள்
8. கால்நடை வளங்கள் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல், பிரசாரம் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. கிராமிய புத்துயிரூட்டல் நிதியம்
2. கிராமிய பொருளாதார புத்துயிரூட்டல் நிதியம் (நிதிசார்)
3. ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்)
4. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
5. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்
6. வரையறுக்கப்பட்ட கிரியா /மில்க் இன்டஸ்ரீஸ்லங்கா (பிறைவேட்) கம்பனி
7. மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா கம்பனி
8. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி
9. நெல் சந்தைப்படுத்தல் சபை
10. பிரதேச பொருளாதார மத்திய நிலையங்கள்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்
- (1992ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க) விலங்கு நோய்ச் சட்டம்
- (1986ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) விலங்கு தீனிச் சட்டம்
- (1958ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விலங்குகள் சட்டம்
- (1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(29) கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன்மூலம் கால்நடை வளங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிப் பிரிவினை விரிவாக்கல் மற்றும் பிரதிபலன்கள் அடிப்படையிலான உற்பத்தித்துறையின் தரரீதியானதும் அளவுரீதியிலானதுமான விருத்திக்கு நடவடிக்கை எடுத்தல் | | |
| 10. கால்நடைத் துறையில் விலங்குகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்குத் தேவையான விஞ்ஞான முறையிலான இனப்பெருக்க முறையினை பிரபல்யப்படுத்துதல் மற்றும் அவ்விலங்குகளை நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதும் தொற்றுநோய்த் தடைக்காப்பும் | | |
| 11. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 12. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(30) அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. போகல கிராபைட் லங்கா லிமிட்டட்<br>2. லங்கா பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடுகள் பிரிவு)<br>3. வரையறுக்கப்பட்ட கஹகொல்ல பொறியியல் சேவைகள் கம்பனி (KESCO) | • (2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) கீழுழைப்பு செயற்பாட்டு தொழில் முயற்சிகள் அல்லது கீழுழைப்பு உபயோக சொத்துக்கள் புத்துயிர்ப்பூட்டல் சட்டம் |

***(30) அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. அரச தொழில்முயற்சித் துறையினுள் புதிய அறிவினையும் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்திக் கொடுக்கத் தேவையான வசதிகளை அளித்தல்

3. அரச தொழில்முயற்சியாளர்களதும் உற்பத்திகளதும் தரம் மற்றும் பண்புசார் தன்மையையும் மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

4. தொழில்முயற்சியினை தேசியப் பொருளாதார முன்னெடுப்புடன் இணைப்பதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்

5. வளங்களை உற்பத்திப் பெருக்கத்துடன் உபயோகிப்பதனூடாக உள்நாட்டு தொழில்முயற்சிகளை தேசியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காகப் பயன்படுத்துதல்

6. அரச வங்கிகள் மற்றும் நிதி முகவராண்மைகளுக்குரிய பொது நிருவாகமும் செயலாட்சிகளும்

7. நிரல் II இல் குறிப்பிட்டுள்ள அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றின் நிதி நிருவாகம்

8. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பின்வரும் நிறுவனங்களின் கீழுழைப்பு உபயோக சொத்துக்களுக்குப் புத்துயிரூட்டுதல் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளைச் செயலாட்சி செய்தலும் கண்காணித்தலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

4. வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. கம்பனி

5. அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்

6. ஹொடேல் டிவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி (PQ 143)

7. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லயின் மற்றும் அதன் துணைக் கம்பனிகள்

8. வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி

9. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைந்த நிறுவனங்களும்

10. சகல அரச வங்கிகளும் அதன் துணைக் கம்பனிகளும் இணைந்த நிறுவனங்களும்

11. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனி

12. வரையறுக்கப்பட்ட வேரஹர பொறியியல் சேவைகள் கம்பனி (WESCO)

13. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை

14. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

15. வரையறுக்கப்பட்ட எல்கடுவ (பெருந்தோட்டக்) கம்பனி

16. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி

17. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி

18. கல்ஓயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி

19. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கிச் சட்டம்
- (1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) வங்கிகளின் மூலம் வழங்கப்படும் கடன் வசூலித்தல் சட்டம் (விசேட ஏற்பாடுகள்)
- (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம்
- (1975ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) திறமுறைகள் அபிவிருத்தி கருத்திட்டச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

***(30) அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| i. ஹொடேல் டிவலப்பஸ் (லங்கா லிமிட்டட் (PQ143) | | |
| ii. புறக்கோட்டையில் அமைந்துள்ள சொத்துகள் – சாமர்ஸ் தானியக் களஞ்சியம் | | |
| iii. புறக்கோட்டை மற்றும் நாரஹேன் பிட்டியில் அமைந்துள்ள சொத்துகள் - லங்காறக்ட்றெஸ் லிமிட்டட் | | |
| iv. கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சொத்துகள் - மரமுந்திரகை கூட்டுத்தாபனம் முன்னர் அமைந்திருந்த காணி | | |
| v. பத்தரமுல்லையில் அமைந்துள்ள சொத்துகள் - சுச்சிர் நெப் புறஜெக்டர் பிறைவேட் லிமிட்டட் | | |
| vi. கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சொத்துகள் - செலிங்கோ லெஷர் புறபட்டீஸ் லிமிட்டட் | | |
| vii. வரையறுக்கப்பட்ட பெலவத்த சீனிக் கம்பனி | | |
| viii. வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கம்பனி | | |
| ix. பதுளையில் அமைந்துள்ள துள்ள சொத்துக்கள் - கலம்பு கொமர்சல் கம்பனி | | |
| x. சினோரெக்ஸ் (லங்கா) லிமிட்டட் | | |
| xi. ஜக்கர்லங்கா லிமிட்டட் | | |
| xii. பிளய்மத் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | | |

**(30) அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

xiii. கொஸ்மொஸ் மெகீ இன்டஸ்ரீஸ்

xiv. காபுல் லேஸ் (பிறைவேட் ) லிமிட்டட்

xv. இன்ரடிறேட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

xvi. சீத்தா பெசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

xvii. டி சி அபரல் (பிறைவேட் ) லிமிட்டட்

xviii. நீடல் கிராப் (பிறைவேட்) லிமிட்டட்

xix. ஹாய் பெசன் காமன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

xx. கொலின்ஸ் காமன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

xxi. றுகுணு புத்தா அபரல் (பிறைவேட்) லிமிட்டட்

xxii. சஞ்ஜய காமன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

xxiii. மெக்பா அபரல் (பிறைவேட்) லிமிட்டட்

xxiv. யொஹீதா அசோசியேட்டஸ் (பிறைவேட்) லிமிட்டட்

xxv. டயனமிக் குளோதின் (பிறைவேட்) லிமிட்டட்

xxvi. 609 பொலிமர்ஸ் எக்ஸ்போட் (பிறைவேட்) லிமிட்டட்

xxvii. கொஸ்கோ பொலிமர் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

***(30) அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| xxviii. கிரேட் வோல் திறெட் மெனுபக்சரின் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxix. ஆதம்ஜீ எக்ஸ்றட்ஸன் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxx. டாட்டா பூட் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxi. ரென்டன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxii. ரிகான் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxiii. கொம்பொசிட் ரவர் சொலியூசன் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxiv. ஹெல்த் பூட் புரடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxv. சிறி சிராக் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxvi. றோயல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | | |
| xxxvii. கொன்டிநென்டல் வனஸ்பதி (பிறைவேட்) லிமிட்டட் | | |
| 9. அரச தொழில்முயற்சிகளை முகாமைத்துவம் செய்வதற்காக நிறுவனச் சட்டகமொன்றைத் தாபித்தல் | | |
| 10. அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பணிகள் | | |
| 11. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 12. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(31) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. பொது நிருவாக மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங் களையும் வகுத்தமைத்தலும் மதிப்பிடுதலும் கண்காணித்தலும்
2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நாடளாவிய சேவைகளின் நிர்வாகமும் ஆளணி முகாமையும்

   இலங்கை நிருவாக சேவை
   இலங்கை கணக்காளர் சேவை
   இலங்கை திட்டமிடல் சேவை
   இலங்கை பொறியியல் சேவை
   இலங்கை விஞ்ஞான சேவை
   இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை
   இலங்கை தொழில்நுட்ப சேவை
3. இணைந்த சேவைகளின் நிருவாகம்
4. தாபன விதிக்கோவையின் கீழான பணிகள்
5. அரசாங்க சேவைப் பயிற்சி
6. தேசிய உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்கில் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்தலும் செயற்படுத்துதலும்
7. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பை செயற்படுத்தல்
8. அரசாங்கத்தின் சகல ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்
2. டிஸ்டன்ஸ் லேர்னிங் சென்டர் லிமிட்டெட்
3. ஓய்வூதியத் திணைக்களம்
4. அரச சேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
5. உற்பத்தித்திறன் செயலகம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1961 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க) கட்டாய பகிரங்க சேவைச் சட்டம்
- (1982ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டம்
- (1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க)துபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியச் சட்டம்
- (1898 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) விதவைகள், அனாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம்
- (1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க) தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்
- (1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்
- (1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) அரச சேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக் கைப்பொறுப்பு நிதியச் சட்டம்
- (1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரசாங்க விடுதிகள் (உடைமையை மீளப்பெறுதல்) சட்டம்
- (1942 ஆம் ஆண்டின 18 ஆம் இலக்க) பகிரங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம்
- (1957ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) பரிசளிப்புப் போட்டிகள் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(31) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 9. உத்தேச அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அரச துறையினுள் நல்லாட்சியை மேம்படுத்தல் | | |
| 10. நவீன நல்லாட்சி எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்துதல் | | |
| 11. மக்கள் சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கும் அரச சேவையினை உறுதிப்படுத்துவதற்காக கொள்கைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | | |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகள் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(32) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்**

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடகம் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள்,அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும் | 1. தகவல் திணைக்களம்<br>2. அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>3. இலங்கை பத்திரிகைப் பேரவை<br>4. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br>5. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்<br>6. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு | • (1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம் |

**(32) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களது அலுவல்களுக்கும் உரியதாக அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள்

3. பாராளுமன்ற உறுப்பினர்களின் தாபன ரீதியானதும் ஒழுக்க ரீதியானதுமான விடயங்களைக் கூட்டிணைத்தல்

4. பாராளுமன்ற உறுப்பினர்களின் பணியாட்டொகுதியினர் தொடர்பான தாபன அலுவல்கள்

5. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலனோம்புகைசார் அலுவல்கள்

6. பாராளுமன்றக் கண்காணிப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்

7. மக்களது உளப்பாங்குகளை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக் கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பிற்குத் தேவையான திறமுறைகளை வகுத்தமைத்தல்

8. மக்களிடையே அறிவு, உளப்பாங்குகள் மற்றும் நல்ரசனை போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

7. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

8. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி

9. வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்

10. செலசினே தொலைக்காட்சி நிறுவகம்

11. கிரியேடிவ் ஹெலன்கா லிமிட்டட்

12. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

13. இலங்கை தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவகம்

14. மஹிந்த ராஜபக்ஸ தேசிய ரெலி-சினிமா பூங்கா (ரன்மிஹிதென்ன)

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1996 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) அரச திரைப்பட கூட்டுத்தாபனச் சட்டம்
- (1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) அரச அச்சக கூட்டுத்தாபனச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

***(32) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 9. சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளுதல் | | |
| 10. உயர்தரத்திலான ஊடக ஒழுக்கத்தினை ஏற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 11. அரசாங்க உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் செய்திகளை வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 12. இலங்கை பற்றிய தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல் | | |
| 13. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரச் சேவைகளையும் வழங்குதல் | | |
| 14. வெளியீடுகளுக்குரிய சர்வதேச ஒப்பந்தங்களையும் சமவாயங்களையும் நடைமுறைப்படுத்துதல் | | |
| 15. திணைக்கள வெளியீடுகள் தவிர்ந்த அரசாங்க வெளியீடுகளின் விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக அலுவல்கள் | | |

**(32) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 16. செய்திகள், திரைப்படங்கள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் காட்சிப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தலும் | | |
| 17. வாணிப தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புகள் மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகள் | | |
| 18. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 19. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(33) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள்,அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>2. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>3. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை (பொது வசதிகள் சபை)<br>4. வீடமைப்புத் திட்டமிடலும் கட்டிட நிலையம் | • (1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு உரிமைகள் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |

***(33) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 2. அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமங்களையும் தராதரங்களையும் விதித்துரைத்தல் | 5. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | • (1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) பொது வசதிகள் சபைச் சட்டம் |
| 3. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட பிரசைக் குழுக்கள் உட்பட பொதுமக்களின் வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதிசார் திட்டங்களையும் செயற்படுத்துதல் | 6. கட்டடத் திணைக்களம் | • (2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் |
| 4. சூழல் நேயமிக்க செலவுக்கேற்ற நன்மையளிக்கும் வீடமைப்பு தொழில் நுட்ப முறைகள்பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல் | 7. அரசாங்க தொழிற்சாலை | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 5. பிரதானமாக அரசாங்க நிறுவனங்களுக்கு பொறிசார் பொறியியல் சேவைகளை வழங்குதல் | 8. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | |
| 6. தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் தரவளவுகளுக்கும் ஏற்றதாக கட்டுமானக் கைத்தொழில் துறையின் பணிகளை ஒழுங்குபடுத்தலும் பதிவு செய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்தலும் | 9. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | |
| 7. நிர்மாணக் கைத்தொழிலுக்கான மதியுரைகளையும் ஒழுங்குறுத்துகைச் சேவைகளையும் வழங்கலும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குதலும் பராமரித்தலும் தொடர்பான பயிற்சி அளித்தலும் | 10. அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் | |
| | 11. வரையறுக்கப்பட்ட டெவ்கோ சேவா தனியார் கம்பனி | |
| | 12. தேசிய உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் அமைப்பாண்மை | |

**(33) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 8. கூட்டாட்சி, முகாமையும் ஒழுங்குறுத்துகைப் பணிகளும் | | |
| 9. மக்கள் கூட்டாட்சி மறுசீரமைப்பும் வினைத்திறனுடனும் துரிதமாகவும் வீடுகளின் உரித்தை உரிமைமாற்றம் செய்தலும் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(34) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங் களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் | 1. இலங்கை துறைமுக அதிகார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • இலங்கை கப்பற்றொழிற் கூட்டுத்தாபனச் சட்டம் (1971ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) |
| 2. கப்பற்படையாட்சித்துறைக்குச் சொந்தமானவை தவிர்ந்த ஏனைய துறைமுகங்களினதும் வெளிச்சவீடுகள் கலங்கரை விளக்கங்களினதும் எண்ணெய் தாங்கி அமைவுகளினதும் உபகரணங்களினதும் அபிவிருத்தியும் நிருவாகமும் | 2. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • (1908 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) துறைமேடை துப்புரவாக்குதல் மற்றும் ஆக்கவுரிமைச் சிட்டைக் கட்டளைச் சட்டம் |
| | 3. வாணிப கப்பற்றுறை செயலாளர் நாயகத்தின் அலுவலகம் | • (1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) கப்பற்றொழில் முகவர் களுக்கு உரிமமளித்தல் சட்டம் |
| | 4. வரையறுக்கப்பட்ட கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் தகவல், ஆராய்ச்சி தனியார் கம்பனி | • (1865 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) கப்பல் உதவியாளர்கள் கட்டளைச்சட்டம் |
| | | • (1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க) வணிகக் கப்பற்றொழிற் சட்டம் |

***(34) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல் | | • (1979ஆண்டின் 51ஆம் இலக்க) இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 4. கப்பற்சேவைகளுக்கான போட்டி விதிகளைத் விதித்தல் | | |
| 5. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக் கிடையில் ஆலோசனைகளைக் கூட்டிணைப்பை உறுதிப்படுத்து தலும் ஆதரவளித்தலும் | | |
| 6. கப்பற்சேதங்களின் பெறுகையும் சமுத்திரப் பொருள் மீட்புகளும் | | |
| 7. கப்பற்றுறை அபிவிருத்தி நிதியத்தின் நிருவாகம் | | |
| 8. கப்பற் கட்டணங்களும் கப்பற்சேவை அலுவல்களும் | | |
| 9. கரையோரம் சார்ந்த பயணிகள் போக்குவரத்து | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(35) காணி அமைச்சர்***

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. காணி தொடர்பான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
2. அரச காணிகளின் நிருவாகம், முகாமை மற்றும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடுகை
3. காணி நிர்ணயமும் காணி உரித்துப் பதிவு தொடர்பான பணிகளும்
4. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான காணிகளை தாமதமின்றி சட்டரீதியான முறையில் வழங்குதல்
5. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளை நிர்வகித்தலும் சட்டத்திற்கமைவாக பகிர்ந்தளித்தலும்
6. காணி அளவை, வரைபடமாக்கல், காணித் தகவல்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட சேவைகள்
7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்
8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்
2. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு
3. காணி நிர்ணயத் திணைக்களம்
4. நிலஅளவையாளர் நாயகம் திணைக்களம்
5. நிலஅளவை, நிலவரைபட நிறுவகம்
6. காணி அளவைச் சபை
7. காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
8. கந்தளாய் சீனிக் கம்பனி

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1950ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) காணி கொள்ளல் சட்டம்
- (1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்
- (1942 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க) காணி மீட்சி கட்டளைச் சட்டம்
- (1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) காணி நிர்ணய கட்டளைச் சட்டம்
